பக்கங்கள் 13+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


# கோர விபத்தில் குடும்பஸ்தர் பலி

(இரத்தினபுரி நிருபர்)

மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற கோர விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 11 சனிக்கிழமை 27.07.2024 அதிர்வு 362





# ரணிலும் சஜித்தும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்!

## விஜயதாஸவுக்கே ஆதரவு என்று மைத்திரிபால பகிரங்க அறிவிப்பு



"வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கோ நான் ஆதரவு வழங்கமாட்டேன்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

04

# பூநகரி வனத்துறை காரியாலயம் மீது தாக்குதல்! அதிகாரிகள் இருவர் காயம்; சந்தேகநபர் கைது!!

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி வனத்துறை காரியாலய அதிகாரிகள் இருவரை அப்பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் மரக்கட்டையால் தாக்கியுள்ளார். சம்பவத்தில் காயமடைந்த இரண்டு அதிகாரிகளும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பூநகரி பிரதேசத்தில் காடுகளை வெட்டியமை தொடர்பாக சில மாதங்களுக்கு முன் கைது செய்யப்பட்ட ஒருவர் மது அருந்தி விட்டு வனத்துறை காரியாலயத்தின் யன்னல்களை உடைத்து அரச உடமைகளுக்குச் சேதம் விளைவித்தார் என்று பூநகரி பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

அதையடுத்துத் தாக்கிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். மேற்படி சம்பவத்தில் காயமடைந்த வனத்துறை காரியாலய அதிகாரிகள் இருவரும் பூநகரி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.





# மக்கள் சட்ட ரீதியான ஆவணங்களை உரியவகையில் பாதுகாக்க வேண்டும்

## தெல்லிப்பளை உதவிப் பிரதேச செயலர் தெரிவிப்பு

(த.சுபேசன்)

பொதுமக்கள் சட்ட ரீதியான ஆவணங்களை உரிய முறையில் பேணிப் பாதுகாப்பதன் ஊடாக சிரமங்களைத் தவிர்க்க முடியும் என்று தெல்லிப்பளைப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி கோ.சங்கீதா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தில் முன்னெடுக்கப்பட்ட இலவச நடமாடும் சேவை நிகழ்வில் தலைமையுரை ஆற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



பிறப்பு, திருமணம், இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியன முக்கிய ஆவணங்களான காணப்படுகின்றன.

பெரும்பாலான பொது மக்கள் தேசிய அடையாள அட்டை பழுதடைந்தாலும் அதனை மாற்றுவது கிடையாது.

இதனால் அண்மையில் நடைமுறைப்படுத்த நலன்புரி நன்மைகள் திட்ட உள்வாங்கலில் பெரும்பாலான பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

எனவே பொது மக்கள் சட்டரீதியான ஆவணங்களை பிழைகள் எதுவுமின்றி சரியான விதத்தில் வைத்திருப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் ஆவணங்களை பெறுவதற்கு சிறிய பணத்தை செலவிட நேரிடுகின்றது.

இதனைக் கருத்தில் கொண்டு சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தினர் நடமாடும் சேவை ஊடாக இலவசமாக ஆவணங்களை பெற்றுக் கொடுக்கவும் சட்ட ஆலோசனைகளை வழங்கவும் முன்வந்துள்ளனர்.

குறித்த நிறுவனத்தினர் தொடர்ச்சியாக இவ்வாறான சட்ட உதவிகளை முன்னெடுத்து வருவது பாராட்டத்தக்க ஒரு விடயம்.-என்றார்.

# யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தினரால் மருதமுனை இளையோருக்கு வழிகாட்டல்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை யுனிவர்ஸ் விளையாட்டு கழகம், விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்கு பல வேறு சமூகப் பணிகளை வழங்கி வருகின்றன. இதன் ஒரு கட்டமாக விளையாட்டு துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்கு புதிய விழிப்புணர்வு செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஐவா கம்பஸ் நிறுவனத்தின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் எம். எச். எம். முனாசிக்குடன் அண்மையில் மருதமுனையில் நடைபெற்றது.

இதன் போது விளையாட்டுக் கழகத்தின் வீரர்களை கொண்டு புதிய பல திட்டங்கள் ஆரம்பிப்பது தொடர்பில் யுனிவர்ஸ் கழகத்தின் உயர் பீட உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இளைஞர் சமுதாயம் தற்போது தனது கவனத்தை போதைப்பொருள் பாவனை, சமூக முரண்பாடான விடயங்களில் ஈடுபடுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் இளைஞர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு சமூக நிறுவனங்களுக்கு உண்டு. நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களை சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாற்றும் நோக்கத்தின் அடிப்படையில் இந்த புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.



எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட உள்ள புதிய வேலை திட்டங்கள் குறித்து யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தினரும் பல்வேறு முன்மொழிவுகளை இதன்போது தெரிவித்தனர். கழகத்தின் மாபெரும் சுற்றுப்போட்டி மற்றும் இளைஞர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு என்பன விரைவில் நடத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் யுனிவர்ஸ் விளையாட்டு கழகத்தின் செயலாளர் ஏ.எம்.முஹம்மட் ஹஜி, முகாமையாளர் எஸ். எம். அன்ஸார், இணைப்பாளர் ஏ.எச்.எம்.சியாம் உட்பட கழக முக்கியஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# ஆபத்துக்களை ஏற்படுத்தும் மரங்களை அகற்றுவது தொடர்பில் காரைதீவில் கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய மரங்களை அகற்றுவது தொடர்பான பிரதேச மட்டக் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் கடந்த வெள்ளிக்கிழமை (26) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர் என்.மோகன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (காணிப்பிரிவு), தொழில்நுட்ப உத்தியோகத்தர், காணி வெளிக்கள போதனாசிரியர், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

அத்தோடு தொடர்புபட்ட நிறுவனங்களான மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு, அரச மரக்கூட்டுத்தாபனம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, கோட்டக் கல்வி அதிகாரி அலுவலகம், பொலிஸ் நிலையம், இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், இலங்கை ரெலிகோம், தீயணைப்பு படைப் பிரிவு (மாநகர சபை, கல்முனை) ஆகிய நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியேரும் கலந்து கொண்டனர்.

காரைதீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய மரங்களினை அகற்றுவது தொடர்பான களவிஜயம் கடந்த 11, 16 மற்றும் 17 ஆந் திகதிகளில் பிரதேச மட்ட களவிஜயக் குழுவால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. பாடசாலைகளில் அகற்றப்பட வேண்டிய மரங்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற தகவல்களைப் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் அனுமதியுடன் வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.







# விடுதலைப்புலிகள் மீதான தடையை நீடித்துள்ளது ஐரோப்பிய ஒன்றியம்!

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் ஆறு மாதங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியம் நீடித்துள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் நோக்கில் 2001/931/CFSP பொது நிலைப்பாட்டின்படி அமைக்கப்பட்ட நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று புதுப்பித்தது.

இந்தப் பட்டியலில் விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தடை செய்யப்பட்ட அமைப்பாகக் கருதப்படும்.

தடை செய்யப்பட்ட நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் அதன் நிதி, பிற நிதி சொத்துக்கள் அல்லது ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் உள்ள பொருளாதார வளங்களை முடக்குவதற்கு இந்தத் தடை உட்பட்டது.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றிய நிறுவனங்கள் தடை செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு நிதி மற்றும் பொருளாதார ஆதாரங்களை வழங்குவதும் தடை செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# ஒரே நாளில் 42 இந்திய மீனவர்களின் வழக்குகள் விசாரணைக்கு வருகின்றன

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 42 இந்திய மீனவர்களின் வழக்குகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் பல்வேறு தினங்களில் கைதான 42 இந்திய மீனவர்களின் வழக்குகளே நாளைமறுதினம் விசாரணைக்கு வருகின்றன.

இதில் ஜூலை 1ஆம் திகதி 4 நாட்டுப் படகுகளில் எல்லை தாண்டிய 25 மீனவர்களும், ஜூன் 16 ஆம் திகதி ஒரு படகில் எல்லை தாண்டிய 4 மீனவர்களும், ஜூலை 11 ஆம் திகதி 3 படகுகளில் எல்லை தாண்டிய 13 இந்திய மீனவர்களும் என மொத்தம் 42 இந்திய மீனவர்களின் வழக்குகள் நாளை மறுதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, ஜூன் 22ஆம் திகதி கைதான மேலும் 22 இந்திய மீனவர்களின் வழக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இதே நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகின்றது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தற்போது 74 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ரணிலும் சஜித்தும்...**

ரணிலும், சஜித்தும் சுயநலவாதிகள் என்றும், இருவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்றும் அவர் சாடினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கே தான் ஆதரவு வழங்குவேன் என்றும் அவர் அறிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே மைத்திரிபால இந்த அறிவிப்பை விடுத்தார்.

“விஜயதாஸ ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்தான். அவருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நான் நிராகரிக்கின்றேன். நாட்டுக்காகத் துணிந்து செயற்படும் அரசியல்வாதியே அவர்.” - என்றும் மைத்திரிபால மேலும் தெரிவித்தார்.

**கோர விபத்தில்...**

இரத்தினபுரி மாவட்டம், கொடகவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெல்மடுல்ல - நோனாகல வீதியில் மல்வத்தைப் பகுதியில் நேற்று இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று கொடகவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி நோக்கிப் பயணித்த ஓட்டோ ஒன்று எதிர்த்திசையில் பயணித்த தனியார் பஸ் ஒன்றுடன் மோதி கவிழ்ந்து பின்புறத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்த நிலையில் கொடகவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இரத்தினபுரி, கஹவத்தை பகுதியில் வசிக்கும் 40 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

தனியார் பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடகவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
JULY
27
2024
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மொட்டுவின் முடிவு திங்களன்று

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னரே அதற்கான ஆரவார எடுப்புகளுடன் களத்தில் இறங்கிய மொட்டுக் கட்சி இம்முறை தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னரும் - தேர்தலுக்கு இன்னும் 56 நாள்கள் மட்டுமே இருக்கையில் கூட - தான் தனது வேட்பாளரை களம் இறக்குவதா என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்காளர்களின் அதீத ஆதரவுடன் அமோக வெற்றியும், தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களையும் பெற்று, மித மிஞ்சிய பலத்துடன் அதிகாரத்துக்கும் வந்த கட்சி, இரண்டு வருடங்களுக்குள்ளேயே எல்லாவற்றையும் போட்டடித்து, நாட்டையும் குழப்பிக் குட்டிச்சுவராக்கி, தனது மக்கள் செல்வாக்கையும் பறிகொடுத்து, இன்று நடுவீதியில் நிற்கிறது.

மொட்டுக் கட்சி இந்தத் தேர்தலில் தனித்து ஒரு வேட்பாளரை நிறுத்தினால் கூட, அந்தக் கட்சி வெற்றி பெற வாய்ப்பு இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

அதனால், இத்தேர்தலில் அக்கட்சியின் முக்கிய உறுப்பினர்களே தம் கட்சிக்குப் பின்னால் அணி திரளப் பின்னடிக்கின்றனர். எப்படயாயினும் வெற்றி பெற வாய்ப்புள்ள ஒரு வேட்பாளரின் பின்னால் ஒண்டுவதுதான் தங்களின் எதிர்கால அரசியலுக்குப் பாதுகாப்பானது - உசிதமானது - என்று கருதும் அக்கட்சியினர் பலரும், அதனால் வெற்றி வாய்ப்பு உள்ள தரப்புகளைத் தேடுகின்றனர்.

இன்றுள்ள நிலையில், வெற்றிக்கு வாய்ப்புள்ள வேட்பாளர்கள் என்று பேசப்படுபவர்கள் மூவர்தான். சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரே அவர்கள். முன்னவர் இருவரும் மொட்டுக் கட்சியினரைக் கிட்டவும் நெருங்க விடமாட்டார்கள். அதனால் மொட்டுக் கட்சியினரின் பிரமுகர்கள் பலரும் தங்களின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பின்னால் அணி திரள முனைகிறார்கள். வேறு மார்க்கங்கள் இல்லை என்ற நிலையில் ரணிலுக்குப் பின்னால் ஒண்டத்துடியாய்த்துடிக்கின்றனர்.

மொட்டுக் கட்சி தனது வேட்பாளர் ஒருவரை களத்தில் நிறுத்தாது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும் என்று அவர்கள் ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்.

ஆனால் மொட்டுக் கட்சி நிர்வாகிகளுக்கோ அந்த ஏற்பாட்டில் பிடிப்பும் இல்லை. நம்பிக்கையும் இல்லை.

தன் கட்சியில் தனித்து ஒரே ஓர் எம்.பியாக வந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு, நிபந்தனையற்ற ஆதரவு கொடுத்து, அவரை ஜனாதிபதியாக்கினோம், எந்த நெருக்கடியும் கொடுக்காமல் அவர் அரசைத் தொடர்வதற்கு எல்லாவித ஆதரவுகளையும் வழங்கினோம், ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பது போல, மொட்டுக் கட்சியையே உடைத்துப் பிளந்து, அரசியல் செய்கின்றார்.

ஒரே ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை மட்டும் வைத்துக்கொண்டு, இந்த இரண்டரை ஆண்டு எஞ்சிய பதவிக்காலத்திலேயே மொட்டுக் கட்சியை முற்றாக செயலிழக்க வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, இன்னொரு முழுமையான ஆட்சி காலத்துக்கு வெற்றி பெற நிபந்தனையின்றி ஆதரவளித்தால், அதன் பின்னர் மொட்டுக் கட்சியே மிஞ்சாது என்பது மொட்டு நிர்வாகிகளின் கவலை. ஆதங்கம்.

அதிலும் பார்க்க, வென்றாலும் தோற்றாலும், இலங்கை வாக்காளர்கள் மத்தியில் மொட்டுச்சின்னம் தொடர்ந்து மனதில் பதிந்திருக்க வழி செய்யுமாற்போல இந்தத் தேர்தலில் மொட்டுக்கட்சி ஒரு வேட்பாளரைத் தனித்து இறக்க வேண்டும் என்பதே கட்சியின் மூத்த நிர்வாகிகளின் எண்ணமாக இருக்கின்றது.

ஆனால் இப்போது ரணிலுக்குப் பின்னால் அமைச்சர்களாக பதவி சுகம் அனுபவித்து நிற்கும் மொட்டுக் கட்சியினரும், ரணிலுக்குப் பின்னால் நின்றால் மட்டுமே வரும் தேர்தலுக்குப் பின்னர் வசதி, வாய்ப்புகள், பதவி, அதிகாரங்கள் தங்களுக்குக் கிடைக்கும் என்று எண்ணும் மொட்டு பிரமுகர்களும் மொட்டு தனி வேட்பாளரை நிறுத்துவதை எதிர்க்கின்றனர்.

இப்படி இரண்டு திறத்தாரையும் கொண்ட - சுமார் 60 பேரை உள்ளடக்கிய - மொட்டுக் கட்சியின் அரசியல் குழு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை கூடி ஒரு முடிவை எடுக்கவிருக்கின்றது. மொட்டுவின் நிலை அன்று வெளியாகும் என எதிர்பார்க்கலாம்.



# தொல்லியல் பாதுகாப்புக்குழு சம்மாந்துறையில் நியமனம்



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

தொல்லியல் இடங்களை பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் சம்மாந்துறை பிரதேச செயலக காணிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் சம்மாந்துறைக்கான தொல்லியல் பாதுகாப்பு குழு நியமனம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வு உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

தொல்லியலாளர் ஆ.குபேரனால் தொல்லியல் இடங்களை எவ்வாறு இனங் காண்பது, தொல்லியல் பொருள்கள் கண்டெடுக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நாம் பின்பற்ற வேண்டிய விடயம், தொல் பொருள்கள் மற்றும் தொல்லியல் இடங்கள் தொடர்பான சட்டங்கள், சட்ட நடவடிக்கைகள் என்பன பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நம்பிக்கையாளர் சபை, மஜ்லிஸ் அஸ்-ஸூறா, கோயில்கள் பரிபாலன சபை, பிரதேச சபை, நீர்ப்பாசன திணைக்களம், வலயக் கல்வி அலுவலகம், சமூக நலன் அமைப்புக்கள் என்பவற்றின் பிரதிநிதிகள், கிராம சேவகர்கள், காணி உத்தியோகத்தர்கள், குடியேற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் போன்றோர் கலந்து கொண்டனர்.

# கண்ணகி கிராமத்தின் மாதர் சங்க பாலர் பாடசாலைக்கு பெயர் பலகை!






( காரைதீவு சகா)

அதி கஸ்ரப் பிரதேசமான அக்கரைப்பற்று கண்ணகி கிராமத்தில் இயங்கி வரும் மாதர் சங்க பாலர் பாடசாலைக்கு தேவையான பெயர் பலகையை திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பெயர் பலகை மற்றும் இரண்டு ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு, கல்வி கற்கும் 20 மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் என்பவற்றை இணைந்த கரங்கள் அமைப்பு வழங்கி வைத்துள்ளது.

பாடசாலை சமுகத்தினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இணைந்த கரங்கள் உறவுகளோடு இணைந்து பயணிக்கும் தருஷன், புவனேஸ்ராஜா ஆகியோரின் நிதி பங்களிப்பில் மாதர் சங்க பாலர் பாடசாலையின் இரண்டு ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 8 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

இந் நிகழ்வில் பெயர்ப் பலகை முன்பள்ளி வெளிக்கள உத்தியோகத்தர் பி. மோகனதாஸ், கண்ணகி வித்தியாலய அதிபர் த.இராசநாதன், கண்ணகி கிராமம் சமூக சேவையாளர் கோகுலன் ஆகியோருடன் இணைந்த கரங்கள் உறுப்பினர்களான காந்தன், சுரேஸ் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

# மாணவர்கள், முதியோர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி!



(மஸ்கெலியா)


பாடசாலை மாணவர்கள் மற்றும் முதியோர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.

இதனை நலிவுற்ற சமூகத்தை மேம்படுத்தும் அரச சார்பற்ற அமைப்பு மூலமாக கொத்மலை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கொத்மலை ஹந்துனுவேவ மத்திய கல்லூரியில் வைத்து வழங்கினர்.

இந் நிகழ்வில் நலிவுற்ற சமூகத்தை மேம்படுத்தும் அமைப்பின் தலைவர் திருமதி சிவராஜன் ஸ்ரீ தலைமையில் இலவச கண் சிகிச்சை முகாம் இடம்பெற்றது.

இதில் சுமார் 40 பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் 25 பெற்றோர்கள், முதியவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.







# சம்மாந்துறையில் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

முன் பிள்ளைப் பருவ தேசிய வாரத்தை முன்னிட்டு முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அல் அஸ்ஹர் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து அல் ஹாஜ் எஸ்.எல். முஹம்மது ஹனீபா அவர்களது ஆலோசனையில், உதவிப்பிரதேச செயலாளர் சட்டத்தரணி யூ.எம். அஸ்லம் அவர்களது வழிகாட்டலின் கீழ் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எச். சம்றினா , ஜே.எஸ். றியானா ஆகியோரது நெறியாள்கையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளராக ஆயுள் வேத வைத்தியர் எம்.சி. காலித், அல் அஸ்ஹர் வித்தியாலய அதிபர், சமூக சேவைப்பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி பசீல், கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.



# சிறுவர் உரிமைகள் தொடர்பான செயலமர்வு

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் முறைசாரா கல்விப் பிரிவு ஏற்பாடு செய்த சிறுவர் உரிமைகள் தொடர்பான செயலமர்வு கடந்த புதன்கிழமையும் வியாழக்கிழமையும் நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமாரின் வழிகாட்டலில் வலயக் கல்விப் பணிமனையின் முறைசாரா கல்வி பிரிவின் ஆசிரியர் ஆலோசகர் எம் .ஐ.அகமட்லெவ்வையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் வளவாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்திலும் சம்மாந்துறை அல் அர்சத் மகா வித்தியாலயத்திலும் கருத்தரங்குகள் நடைபெற்றன.

இதன்போது சிறுவர் உரிமை மற்றும் கடமைகள் தொடர்பாக பூரண விளக்கம் அளிக்கப்பட்டது.





# வீடமைப்புத் திட்ட வீதி திறப்பு

**(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )**

பண்டாரவளை, பூனாகலை கீழ்ப் பிரிவு தோட்டப் பகுதியில் மறைந்த தலைவர் அமரர் சந்திசேகரால் ஏற்படுத் தப்பட்ட புதிய வீடமைப்புத்திட்டத்துக்கான பாதையை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ், புனரமைத்து அண்மையில் மக்கள் பாவனைக்கு கையளித்தார்.

இதன் போது கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் கலந்து கொண்டு வீதியைத் திறந்து வைத்தார்.

## கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டியில்

# ஏழு முதலிடங்கள் பெற்றுள்ள கனமூலை முஸ்லிம் ம. வி.

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கோட்ட மட்ட ஆங்கில மொழி தினப் போட்டியில் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஏழு மாணவர்கள் முதலாம் இடங்களையும் மூன்று மாணவர்கள் இரண்டாம் இடங்களையும் நான்கு மாணவர்கள் மூன்றாம் இடங் களையும் பல்வேறு போட்டிகளில் பெற்றுள்ளனர் என்று பாடசாலையின் அதிபர் பீ.எம் முஸ்னி தெரிவித்துள் ளார்.



இதன்படி தரம் 13 ஐச் சேர்ந்த ஏ.அர் அம்ரா மற்றும் தரம் 11 ஐச் சேர்ந்த கே எப் சமீஹா ஆகிய இருவரும் பார்த்தெழு தல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த என்.எப் ரீமா சொல்வளம் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எஸ்.எப் சஸ்மின், தரம் 10 ஐச் சேர்ந்த எம்.ஐ.எப் சர்ஹா, மற்றும் தரம் 05 ஐச் சேர்ந்த எம்.எப் சபியா ஆகியோர் கவிதை போட்டியிலும், தரம் 11 ஐச் சேர்ந்த எப். பர்வீஸ் எழுத் தாக்கம் போட்டியிலும் முதலாம் இடங் களை பெற்றுக் கொண்டனர்.

தரம் 09 ஐச் சேர்ந்த ஐ.எம். சதா பார்த்த எழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எம்.என்.எப். ரீமா சேர்த்தெ முதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எப். இபா ஆங்கில பேச்சு போட்டியிலும் இரண்டாம் இடங்களை பெற்றுள்ளனர்.

தரம் 08 ஐச் சேர்ந்த எம்.எப். அம்ரா பார்த்தெழுதல் போட்டியிலும் , தரம் 11 ஐச் சேர்ந்த எம்.என் அப்ரா சொல்வளம் போட்டியிலும், தரம் 09 ஐச் சேர்ந்த ஐ.எம் இஹ்மா மற்றும் தரம் 03 ஐச் சேர்ந்த எம்.எப். அனீகா ஆகிய இரு வரும் கவிதை போட்டியிலும் மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்டுள்ளனர்.

இவர்களின் இவ் வெற்றிக்கு அய ராது துணை நின்று ஊக்கம் கொடுத்த ஆசிரியர்களான எம்.டி சர்மிலா சீனத், எம்.எப் சப்வானா, எம்.எம்.எப் சாதிகா ஆகியோருக்கு கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் நிர்வாகம் மற் றும் உப அதிபர் எம்.எப்.எம் நௌசாத் பிரதி அதிபர் ஐ.என்.எம்.எம் லாஹீர் ஆகியோர் சார்பாக தமது வாழ்த்துக்க ளையும் நன்றிகளையும் அதிபர் பீ.எம் முஸ்னி தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.








# சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி வரவேற்பு வளைவு அமைக்க அடிக்கல்!

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம். முகம்மட் ஹரீஸ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை கல்வி வலய சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் நிர்மாணிக்கப்படவுள்ள வரவேற்பு வளைவு அமைக்க அடிக்கல் நட்டு வைத்துள்ளார். சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் எம்.டீ. முஹம்மட் ஜனூபர் தலைமையில் இந்த நிகழ்வு நடை பெற்றது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனை நிர்வாக பிரதி கல்வி பணிப்பாளர் பி.எம்.வை. அரபாத் முகைதீன், சம்மாந்துறை மஜ்லிஸ் அஸ்–சூரா தலைவர் ஓய்வு பெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ. அமீர், சம்மாந்துறை உலமா சபை தலைவர் மௌலவி எம். எல்.எச்.பஷீர், திருகோணமலை மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எம். எம். மஹ்ரூப் ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாவா, வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். நியாஸ் உட்பட உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# கோலூன்றிப் பாய்தலில் சாதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் வட மாகாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த அருந்தவராசா புவீதரன் கோலூன்றிப் பாய்தல் நிகழ்வில் 5.11 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டித் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

# மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம்

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நிதி ஆயோக் கின் 9 ஆவது ஆட்சிக்குழு கூட்டம் புதுடில்லியில் தொடங்கியது.

2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவது குறித்து இந்தக் கூட்டம் ஆலோசனை மேற் கொள்கிறது. மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே ஒத்துழைப்பை வளர்ப்பதையும், திட்டங்களை வழங்கு வதற்கான வழிமுறைகளை வலுப்படுத்துவதன் மூலம் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிதி ஆயோக்கின் உச்ச அமைப்பான இந்த ஆட்சிக்கு ழுவில், அனைத்து மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேசங்களின் லெப்டினன்ட் கவர்னர்கள் மற்றும் பல மத்திய அமைச்சர்கள் உள்ளனர். பிரதமர் மோடி நிதி ஆயோக்கின் தலைவராக உள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற தலைமைச் செயலாளர்களின் 3 ஆவது தேசிய மாநாட்டில் அரசுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த தேசிய மாநாட்டின் போது, ஐந்து முக்கிய தலைப்புகளில் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

குடிநீர் அணுகல், அளவு மற்றும் தரம்; மின்சாரம்: தரம், செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மை; ஆரோக்கியம்:



அணுகல், மலிவு மற்றும் கவனிப்பின் தரம்; பள்ளி: அணுகல் மற்றும் தரம் மற்றும் நிலம்; சொத்து: அணுகல், டிஜிட்டல் மயமாக்கல், பதிவு மற்றும் பிறழ்வு என ஐந்து முக்கிய தலைப்புகளில் பரிந்துரைகள் வழங்கப் பட்டன.

விக்சித் பாரத் 2047 இற்கான 10 துறை சார்ந்த கருப் பொருள் பார்வைகளை ஒருங்கிணைக்கும் பணி நிதி ஆயோக்கிடம் கடந்த ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சி, சமூக முன்னேற்றம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் நல்ல நிர்வாகம் உள்ளிட்ட வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இந்தியாவின் வளர்ச்சி இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதை நிதி ஆயோக் இலக்காகக் கொண் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நிதி ஆயோக் கூட்டத்தில் மம்தா வெளிநடப்பு; பேச நேரம் கொடுக்கவில்லை என குற்றச்சாட்டு

நிதி ஆயோக் கூட்டத்தில் 5 நிமிடங்கள் மட்டுமே தன்னால் பேச முடிந்தது என்றும் பிறகு தனது ‘மைக் ஓப்’ செய்யப்பட்டுவிட்டது எனவும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

இதனால், மத்திய அரசு பாரபட்சம் காட்டுவதாகக் குற்றம் சாட்டி அவர் வெளிநடப்பு செய்தார்.

நிதி ஆயாக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜி,

“நிதி ஆயோக் கூட்டத்தில் பேசும்போது, மாநில அரசுகளை மத்திய அரசு பாரபட்சமாக நடத்தக் கூடாது என கூறினேன். தொடர்ந்து பேச விரும்பினேன். ஆனால் 5 நிமிடம் மட்டுமே பேச அனுமதித்தார்கள். எனக்கு முன் பேசியவர்கள் 10 முதல் 20 நிமிடங்கள் வரை பேசினார்கள்.

எதிர்க்கட்சிகள் தரப்பில் நான் மட்டுமே பங்கேற்றேன். இருந்தும், என்னைப் பேச அனுமதிக்கவில்லை. நான் பேசிக்கொண்டிருந்தபோதே எனது ‘மைக்கை ஓப் செய்துவிட்டார்கள். ஏன் என்னை தடுத்தீர்கள், ஏன் பார பட்சம் காட்டுகிறீர்கள் என்றேன். இந்த கூட்டத்தில் நான் பங்கேற்றதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடைந்திருக்க



வேண்டும். மாறாக, உங்கள் கட்சிக்கும், உங்கள் அரசாங் கத்திற்குமே அதிக வாய்ப்புகளைக் கொடுக்கிறீர்கள். எதிர்க்கட்சிகள் தரப்பில் நான் மட்டுமே பங்கேற்ற போதும், நீங்கள் என்னை பேசவிடாமல் தடுக்கிறீர்கள். இது வங்கத்தை மட்டுமல்ல, அனைத்து பிராந்திய கட்சி களையும் அவமதிக்கும் செயலாகும்.” என தெரிவித்தார்.

# இந்திய பிரதமர் மோடி உக்ரைனுக்கு விஜயம்

உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பின் பின்னர் முதன் முறையாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி, உக்ரைனுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய பிரதமரின் இந்த விஜயம் அடுத்த மாதம் இடம் பெறவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் இத்தாலியில் இடம் பெற்ற ஜி-7 உச்சிமாநாட்டின் போது சந்தித்திருந்தனர்.

இந்த சந்திப்பு இடம்பெற்று ஒரு மாதத்தின் பின்னர் இந்த தகவல் வெளியாகியுள்ளது.



# பரிஸில் பிரமிக்க வைத்த ஒலிம்பிக் போட்டிகள்



ஒலிம்பிக் போட்டியின் வரலாற்றில் எப்போதுமே நவீனத்துவத்தின் மறுபிறப்பை நிருபிக்கும் பிரான்ஸ் தனக்கே உரிய பிரமாண்டமாக தனித்துவம் மற்றும் அசாதார படைப்புத்திறனுடன் ஒலிம்பின் ஆரம்ப நிகழ்வை நேற்றிரவு நடத்தி முடித்துள்ளது.

ஆரம்ப விழாவை வழக்கம் போல் மைதானத்தில் அல்லது அரங்கத்தில் நடத்தாமல் நகரின் மையப்பகுதியில் உள்ள செயின் நதியில் நடத்துவதற்கான திட்டம் முதலில் பரிந்துரைக்கபட்டபோது இது சாத்தியமில்லை என்றே பலரும் கருதினர்.

ஆனால் இது சாத்தியமே என நேற்றிரவு பரிசில் நிருபிக்கப்பட்டதுடன் ஒலிம்பிக் வரலாற்றில் முதன் முறையாக ஒரு ஆரம்ப விழா ஒரு மைதானத்தில் நடைபெறாமல் நீர்வழிப்பாதையுடன் ஒரு நகரையே அரங்கமாக மாற்றிய அதிசயமாக மாறியுள்ளது.

இந்தநிலையில், நேற்று கண்கவர் நிகழ்வுகளுடன் இந்த ஆரம்ப நிகழ்வு மிகமிக வித்தியாசமாக சுமார் நான்கு மணி நேரம் நேரடியாகவும் உலகளாவிய ரீதியில் கோடிக்கணக்கான பார்வையாளர்களை தொலைக் காட்சிகளிலும் கட்டிப்போட்டிருந்தது.

பிரெஞ்சு அரச தலைவர் இமானுவேல் மக்ரோன், பிரிதானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் மற்றும் உட்பட 100 இற்கும் மேற்பட்ட அரச தலை முகங்கள் இந்த நிகழவில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு ஆரம்பிக்க முன்னர் பிரான்சின் தொடருந்து வலையமைப்பு மீது நாசகார தீவைப்புத் தாக்குதல்கள் இடம்பெற்றாலும் ஆரம்ப நிகழ்வு இடமபெற்ற போது மழைப்பொழிவு இருந்தாலும் இந்த பிரமாண்டமா நிகழ்வு இடமபெற்றது.

6,800 விளையாட்டு வீரர்கள், 85 படகுகளில் தலைநகரின் மிகவும் பிரபலமான லூவர் அருங்காட்சியகம், ஈபிள் கோபுரம், கிராண்ட் பலஸ் எனப்படும் பெரு அரண்மனை மற்றும் ஆர்க் து ட்ரையம்ப் போன்ற அடையாளங்களைக் கடந்து ஆற்றில் பயணிக்க பாலங்கள், முக்கிய கட்டிடங்கள் உட்பட்ட இடங்களில் 12 கலைப் பிரிவுகளை கொண்ட கலைஞர்களின் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த விழாவில் அமெரிக்க பாடகி லேடி காகா மற்றும் கனடிய பாடகி செலின் டி யோன் உட்பட்ட பிரபலங்களிக் ஆச்சரியமான நிகழ்ச்சிகள் நடந்ததுடன் கொட்டும் மழை விளையாட்டு வீரர்களை நனைத்தாலும் 2,000 இசைக்கலைஞர்கள் மற்றும் நடனக் கலைஞர்கள் நடத்திய உற்சாகமான நிகழ்வுகளை அதனால் குழப்ப முடியவில்லை.

ஓகஸ்ட் 11 ஆம் திகதி முடிவடையும் விளையாட்டுப் போட்டிகளில் 10,500 இற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் 32 விளையாட்டுகளில் போட்டியிடும் நிலையில் இன்று இடம்பெறும் போட்டிகளில் 14 தங்கப் பதக்கங்கள் உட்பட பல தங்ககங்கள் வெல்லப்பட உள்ளதுடன் இந்த ஒலிம்பிக்கில் உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பைத் தொடர்ந்து ரஷ்யர்கள் மற்றும் பெலாரசியர்கள் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# தேர்தலில் தான் வெற்றிபெறாவிட்டால் மூன்றாம் உலகப் போர் உருவாகக்கூடும்

## டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை

நடக்கவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெறாவிட்டால் மூன்றாம் உலகப் போர் உருவாகக்கூடும் என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

புளோரிடா மாகாணத்தில் அமைந்துள்ள ட்ரம்ப்பின் விடுதியில் இடம்பெற்ற இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேற்படி விடுதிக்கு நேற்று முன்தினம் நெதன்யாகு தனது மனைவி சாராவுடன் விஜயம் செய்த போது ட்ரம்ப், அவர்களை விடுதியின் வாசல் வரை சென்று வரவேற்றார்.

இதன்போது, இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ட்ரம்ப் மூன்றாம் உலகப்போர் தொடர்பாக நெதன்யாகுவை எச்சரித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெறும் பட்சத்தில் உலகின் அதிகாரப் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு காணப்படும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப்போருக்கு பின் எப்போதும் இல்லாத அளவுக்கு மூன்றாம் உலகப்போர் தொடர்பான கருத்து தற்போது வலுப்பெற்றுள்ளது.

இதற்கு காரணம் அமெரிக்காவை ஆளும் திறமையற்ற ஆட்சியாளர்கள் என ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, ட்ரம்ப்பின் அறிவுறுத்தலுக்கமைய ஹமாஸுடன் போர் நிறுத்த உடன்படிக்கையை கொண்டு வர நெதன்யாகு முடிவு செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் - 6
சனிக்கிழமை 27/07/2024

## மிசிசாகா நகரில் காணாமல்போன 3 வயதுச் சிறுவன் சடலமாக மீட்பு!

**ஒன்ராரியோ, ஜூலை 27**

மிசிசாகா நகரில் நேற்று மாலை முதல் காணாமல் போன மூன்று வயது சிறுவன் சடலமாக மீட்கப் பட்டுள்ளான்.

C2 ▶




# உரிமை கோரப்படாமல் சடலங்கள் வைத்தியசாலையில் குவியும் நிலை

## மரணச் சடங்கு செய்ய பொருளாதார இயலுமை இல்லை

நியூ ஃபவுண்ட்லான்ட், ஜூலை 27 நியூ ஃபவுண்ட்லான்ட் பகுதியில் உரிமை கோரப்படாத சடலங்கள் குவிந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மரண சடங்குகளை மேற்கொள் வதற்கு பொருளாதார இயலுமை இல்லாத உறவுகள் சடலங்களைக் கைவிட்டுச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் போதிய அளவு உதவியின்றி சிலரால் தங்களது நேசத்திற்குரியவர்களின் இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள முடிய வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

C2 ▶



# புலம்பெயர்ந்து வருவோர் எண்ணிக்கை அரச கட்டுப்பாடுகளினால் குறையாதாம்

## எதிர்வு கூறுகின்றது கனடா வங்கி


புலம்பெயர்தல் தொடர்பில் கொண்டுவரப்பட்டுள்ள கட்டுப் பாடுகளால் புலம்பெயர்வோர் எண்ணிக்கை குறையும் என்று கூறியுள்ளது கனடா அரசு.

ஆனால், உண்மையில், புலம்பெயர்வோர் எண்ணிக்கை கனடா அரசு வெளியிட்ட எண்ணிக் கையைவிட அதிகரிக்கும் என மாறுபட்ட கருத்தொன்றை வெளி யிட்டுள்ளது கனடா வங்கி.

மார்ச் மாதம் 21ஆம் திகதி, கனடாவில் தற்காலிகமாக வாழும் வெளிநாட்டவர்களின் (non-permanent residents or NPRs) எண்ணிக்கையை, மக்கள் தொகை யில் 6.2 சதவிகிதத்திலிருந்து, 5 சதவிகிதமாகக் குறைக்க

C2 ▶





# பாண் விலையை மோசடியாக அதிகரித்த நிறுவனங்கள் 500 மில்லியன் டொலர்கள் செலுத்துவதற்கு இணக்கம்

**ஒன்ராரியோ, ஜூலை 27**

கனடாவில் பாண் விலையை மோசடியான முறையில் அதிகரித்த நிறுவனங்கள், பெருந்தொகை பணத்தை நட்டஈட்டுத் தொகையாக வழங்க இணங்கியுள்ளன.

மோசடியான முறையில் பாண் விலையை நிர்ணயம் செய்த நிறுவனங்கள் இவ்வாறு 500 மில்லியன் டொலர் செலுத்துவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளன.

லெப்லோவ் மற்றும் அதன் தாய் நிறுவனமான ஜார்ஜ் வெஸ்ட்ரன் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இவ்வாறு 500 மில்லியன் டொலர்களை செலுத்துவதற்கு இணங்கியுள்ளன.

இந்த இரண்டு நிறுவனங்களும் கூட்டாக இணைந்து பாண் விலை நிர்ணய சதி யில் ஈடபட்டன எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் நீதிமன்றில் இந்த நிறுவனங்களுக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

கனடாவின் முன்னணி மளிகை பொருள் விற்பனை சங்கிலித் தொடர்களைக் கொண்ட வால்மார்ட், மெட்ரோ, ஜெயன்ட் டைகர், சோபெய்ஸ் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு எதிராக கனடிய மக்களின் சார்பில் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கடந்த 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் கனடாவில் பாண் கொள்வனவு செய்தவர்கள் அனைவருக்காகவும் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

ஜார்ஜ் வெஸ்ட்ரன் நிறுவனம் 247.5 மில்லியன் டொலர்களையும் லெப்லோவ் நிறுவனம் 252.5 மில்லியன் டொலர்களையும் செலுத்துவதற்கு இணங்கியுள்ளன.

கனடிய சந்தையில் பாணின் விலை மோசடியான முறையில் நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக வழக்குத் தொடுநர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் மோசடி இடம் பெற்றுள்ளதனை உறுதி செய்துள்ளது.

## மிசிசாகா நகரில்...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

ஒன்ராரியோ மாகாணத்தில் மிசிசாகா நகர பூங்கா ஒன்றில் இந்த மூன்று வயது சிறுவன் காணாமல் போனதாக நேற்று பொலிஸாரிடம் முறையீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சிறுவனை தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவரது சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

எரிண்டேல் பூங்காவிற்கு அருகில் உள்ள ஒரு சிற்றோடையில் ஜைத் அப்துல்லா வெள்ளி மாலை சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது மரணத்தில் சந்தேகத்திற்கு இடமில்லை என பீல் பிராந்திய போலீசார் தேவை.

சிறுவனின் மரணத்திற்கான காரணத்தை பிரேத பரிசோதனையாளர் தீர்மானிப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடாவின் மிஸ்ஸிசாகாவில் 3 வயது சிறுவன் காணாமல் போயிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

## உரிமை கோரப்படாமல்...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மாகாணத்தின் மிகப்பெரிய வைத்தியசாலையில் பிணவறைகளில் உரிமை கோரப்படாத பல சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்தின் அரசாங்கம் மக்களுக்கு போதிய அளவு வசதிகளை வழங்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் கௌரவமான முறையில் அடக்கம் செய்யப்படுவதற்கு உண்டான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் உயிரிழக்கும் சிலரது உறவினர்கள் சடலங்களைப் பெற்றுக்கொள்ள மீள வருவதே இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதி கிரியைகளை மேற்கொள்வதற்கு போதிய அளவில் நிதி வசதி இல்லாத காரணத்தினால் இவ்வாறு அவர்கள் சடலங்களை பொறுப்பேற்றுக் கொள்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வைத்தியசாலையின் பிணவறைகளில் அதிக எண்ணிக்கையிலான சடலங்கள் தேங்கி கிடக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலம்பெயர்ந்து...

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

நடவடிக்கை எடுக்க இருப்பதாக, கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு (Immigration, Refugees and Citizenship Canada or IRCC) அறிவித்திருந்தது.

ஆனால், அரசின் கருத்துக்கு மாறாக, வித்தியாசமான கருத்தொன்றை தெரிவித்துள்ளது கனடா வங்கி.

உண்மையில், கனடாவில் தற்காலிகமாக வாழும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத்தான் வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளது கனடா வங்கி.

அது, 2025, 26ஆம் ஆண்டு கால கட்டத்தில், வருடாந்திர மக்கள்தொகை வளர்ச்சி வீதம், மொத்தத்திலேயே 2 சதவிகிதம் மட்டுமே குறையும் என்று கூறியுள்ளது.

மார்ச் மாதம் கனடா அரசு அறிவித்ததற்கு மாறாக, ஏப்ரல் மாத ஆரம்பத்தில் கனடாவில் தற்காலிகமாக வாழும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 6.8 சதவிகிதமாக இருந்ததாக கூறும் கனடா வங்கி, அந்த வீதம் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

ஆகவே, அரசு அறிவித்த 5 சதவிகிதத்தை எட்ட கூடுதல் காலம் பிடிக்கும் என்றும் கனடா வங்கி தெரிவித்துள்ளது.

கனடாவில் தற்காலிகமாக வாழும் வெளிநாட்டவர்கள் அல்லது non-permanent residents என்பது, கனடாவுக்கு கல்வி கற்க வரும் சர்வதேச மாணவர்கள், தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் அகதிகளைக் குறிக்கும்.




# பரிஸ் ஒலிம்பிக்ஸின் ஆரம்ப நிகழ்ச்சியில் கனடிய பாடகி செலின் டியோனின் இசை

**ஒன்ராரியோ, ஜூலை 27**

பரிஸ் ஒலிம்பிக்ஸ் ஆரம்ப விழாவில் கனடிய பாடகி செலின் டியோன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஈபிள் கோபுரத்தில் இருந்து அவர் ஒரு சக்திவாய்ந்த நிகழ்ச்சியை நடத்தி ஒலிம்பிக்ஸ் போட்டிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

அவரது இசை நிகழ்ச்சி நான்கு மணி நேரம் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் ஆரம்ப விழாவில் இறுதிப் பகுதியாக இருந்தது.

உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கானவர்கள் பார்வையிடும் ஒலிம்பிக்ஸ் ஆரம்ப விழாவின் ஒரு பகுதியாக செலின் டியோன் நிகழ்வு நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு பல வார காலமாக இருந்து வந்தது.

அவரது நிகழ்ச்சி கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் பாராட்டைப் பெற்றுள்ளது.





# கனடியப் பெண்கள் உதைபந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளர் பணி இடைநிறுத்தம்

## எதிரணிப் பயிற்சியை ட்ரோன் கமரா கொண்டு உளவு பார்த்தாராம்

**ஒன்ராரியோ, ஜூலை 27**

கனடிய பெண்கள் உதைபந்தாட்ட அணியின் தலைமைப் பயிற்சியாளர் பெவ் பிரிஸ்ட்மன் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து மகளிர் அணி பயிற்சியில் ஈடுபடு வதனை ட்ரோன் கமரா கொண்டு கண்காணித்தார் என இந்தப் பயிற்றுவிப்பாளர் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் பரிசில் ஆரம்பமாம் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பதற்காக நியூசிலாந்து மற்றும் கனடிய அணிகள் பாரிஸ் சென்றுள்ளன.

பரிஸில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளர் நியூசிலாந்து உதைபந்தாட்ட அணி பயிற்சியில் ஈடுபடுவதை உளவு பார்த்தார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரையில் பயிற்றுவிப்பாளர் பணியில் இருந்து அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

எதிர்வரும் போட்டிகளுக்கு பயிற்றுவிப்பாளர் பிரிக்ஸ்மென் இணைந்து கொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் கனடிய ஒலிம்பிக் கமிட்டி அறிக்கை ஒன்றின் மூலம் அறி வித்துள்ளது.

போட்டித் தொடருக்கு முன்னர் நடைபெற்ற பயிற்சி நடவடிக்கைகளின் போது இவ்வாறு உளவு பார்க் கப்பட்டதாக நியூசிலாந்து ஒலிம்பிக் கமிட்டி சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மகளிர் அணியின் பயிற்றுவிப்பாளர் பிரிக்ஸ்மென் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.



# கனடியப் பெண்கள் தேசிய உதைபந்தாட்ட அணி முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்தை வீழ்த்தியது

**ஒன்ராரியோ, ஜூலை 27**

பரிஸ் ஒலிம்பிக் தொடரின் ஆரம்ப ஆட்டத்தில் கனடிய பெண்கள் தேசிய உதைபந்தாட்ட அணி வெற்றி பெற்றுள்ளது.

கனடிய பெண்கள் தேசிய உதைபந்தாட்ட அணி யின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் கனடிய அணி 2 க்கு 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பரிஸ் ஒலிம்பிக் தொடரில் மேலும் இரண்டு ஆரம்ப சுற்று ஆட்டங்களில் பிரான்ஸ், கொலம்பிய அணி களை கனடா எதிர்க்கொள்ளவுள்ளது.

பிரான்ஸ் அணிக்கு எதிரான ஆட்டம் நாளைய தினமும், கொலம்பிய அணிக்கு எதிரான ஆட்டம் ஜூலை 31ஆம் திகதியும் நடைபெறவுள் ளன.





# காதல் வலையில் வீழ்த்தி கனடா யுவதிகளை நுதனமாக ஏமாற்றும் இணையக் காதகர்கள்



**ஒன்ராரியோ, ஜூலை 27**

டொரன்ரோவைச் சேர்ந்த இரண்டு பெண்கள் நூதன முறையில் ஏமாற்றப் பட்டுள்ளனர்.

ஒரு பெண் 62,000 டொலர்களை யும் மற்றைய பெண் 14,000 டொலர் களையும் இழந்துள்ளனர்.

இந்த இரண்டு பெண்களும் இணைய வழியில் காதல் வலையில் வீழ்ந்து ஏமாற்றமடைதுள்ளனர் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

பிரித்தானியாவின் கப்பல் ஒன் றின் மாலுமி என அடையாளப்படுத்திக் கொண்ட நபர் ஒருவர் தம்மை ஏமாற்றி னார் என ராமா என்ற பெண் தெரி வித்துள்ளார்.

முகநூல் வழியாக ஏற்பட்ட நட்பின் அடிப்படையில் தாம் நெருங்கி பழகினார் என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த நபர் அந்தப் பெண்ணுக்கு பல்வேறு பரிசு பொருகளை அனுப்பி வைத்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

ஆபரணங்கள் உள்ளிட்ட பல்வேறு பரிசு பொருள்களை அனுப்பி வைத் துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தாம் அனுப்பிய பரிசு பொருள்கள் கனடிய எல்லைப் பகுதி யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன எனவும், வரி, தரகு மற்றும் காப்புறுதி கட்டணங்களை செலுத்த வேண்டியுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பரிசுப் பொருள்களை பெற றுக் கொள்வதற்காக 62,900 டொலர் களைச் செலுத்துமாறும் தாம் அத னைத் திரும்பி தருவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நபரின் வார்த்தைகளை நம் பிய, ராமா என்ற பெண் 62,000 டொலர்களை செலுத்தியுள்ளார்.

எனினும் பின்னர் இந்த அனைத்து செயல்களும் மோசடி என்பது தெரிய வந்துள்ளது.

தனது வாழ்நாள் சேமிப்பு தொகை யையும் கடனாக பெற்றுக்கொண்ட தொகையையும் இவ்வாறு செலுத்தினார் என அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

மற்றும் ஒரு பெண்ணும் இவ்வாறு இணைய வழியில் தொடர்பு பேணி 14,000 டொலர்களை இழந்துள்ளார்.

இணைய வழி டேட்டிங் இணைய தளம் ஒன்றின் ஊடாக இந்த நபர் தம்மை தொடர்பு கொண்டார் என அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

அந்த நபரை இரண்டு தடவைகள் தாம் நேரில் சந்தித்துள்ளார் எனவும், தாம் தனியார் ஜெட்டில் பயணிக்கின் றார் எனவும், பாரிய நிதி நிறுவன மொன்றை முகாமை செய்கின்றார் எனவும் அந்த நபர் கூறினார் என அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார்.



## நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் 3.9 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறை!

**ஒன்ராரியோ, ஜூலை 27**

இந்த நிதியாண்டின் முதல் இரண்டு மாதங்களில் மத்திய அரசாங்கம் 3.9 பில்லியன் டொலர் பற்றாக குறையைப் பதிவு செய்துள்ளது.

ஏப்ரல், மே மாதங்களில் மத்திய அரசாங்கம் 3.9 பில்லியன் டொலர் பற்றாக்குறையை பதிவு செய்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 1.5 பில்லியன் டொலர் உபரியை மத்திய அரசாங்கம் பதிவு செய்தி ருந்தது

அதிக வரி வருவாய் காரணமாக வருவாய் 6.5 பில்லியன் டொலர் அல்லது 8.9 சதவீதம் அதிகரித் தது.

அதிக வட்டி விகிதங்கள் காரணமாக பொதுக் கடன் கட்டணம் 2.3 பில்லியன் டொலர் அல்லது 33.8 சத வீதம் அதிகரித்துள்ளது.

## ஸ்கார்பரோ வாகன விபத்தில் மோ. சைக்கிள் ஓட்டி மரணம்

**ஒன்ராரியோ, ஜூலை 27**

ஸ்கார்பரோ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வாகனம் ஒன்றில் மோதிய தன் காரணமாக இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் டொரன்டோ பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கிங்ஸ்டன் மற்றும் ஷெப்பர்ட் வீதிகளுக்கு அருகாமையில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 40 வயது மதிக்கத்தக்க நபர் ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயம் அடைந்த அந்த நபர் வைத் தியசாலைக்குக் கொண்டு விரையப்பட்டார் எனவும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வாகன விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்த விபத்துடன் தொடர்புடைய மற்றைய வாகன சாரதி விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வரு கின்றார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

